05.08.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

விளைநிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்க சிறு, குறு விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் செவ்வாய்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விருதுநகர் மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு குறு விவசாயிகள் ஆகியோருக்கு தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் பண்ணைக்குட்டைகள் இலவசமாக அமைத்துக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் நிகழாண்டில் 2000 பண்ணைக்குட்டைகள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரையில் 773 குட்டைகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. 40 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பண்ணைக்குட்டைகள் அமைப்பதன் மூலம் நீர்வளமும், ஈரப்பதமும் பாதுகாப்பது உறுதி செய்யப்படுகிறது. அதோடு, கிணறுகளில் நீர்மட்டமும் அதிகரிக்கிறது.

எனவே இத்திட்டத்தில் இலவசமாக பண்ணைக்குட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் விளைநிலத்தின் விவரம், சிறு, குறு விவசாயிக்கான சான்று, தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அடையாள அட்டை எண் ஆகியவற்றுடன் அந்தந்த பகுதி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி தலைவர் ஆகியோரிடம் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக தங்களது விண்ணப்பங்களை அளிக்க வேண்டும். இப்பணிகள் முழுவதும் இயந்திர உதவி இல்லாமல், தேசிய ஊரக வேலை உறுதி திட்ட உள்ளூர் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படும். இதில், குறைந்தபட்சம் 15 மீட்டர் நீளம், 15 மீட்டர்

அகலம் மற்றும் 1.5 மீட்டர் ஆழம் வரையில் பண்ணைக்குட்டைகள் அமைத்துத் தரப்பட இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

**தமிழகம், புதுவையில் இன்றும் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் புதன்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையின் சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும். இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் செட்டிக்குளம், பாடலூரில் 80 மி.மீ. பள்ளிப்பட்டு, கோபிசெட்டிபாளையம், திருபுவனம், அரிமளத்தில் 60 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதேபோல ஏற்காடு (40), திருவண்ணாமலை, வலங்கைமான், பரமக்குடி, காரைக்குடி, திருவையாறு, ஈரோடு, பாபநாசம் (30), குடவாசல், விருதுநகர், சிவகங்கை, தேவலா, சங்ககிரி (20 மி.மீ.), வால்பாறை, திருத்தணி, மன்னார்குடி, திருச்சி, நாமக்கல், திண்டுக்கல், கமுதி, பட்டுக்கோட்டை (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது. சென்னையில் மழை: சென்னையின் பல்வேறு இடங்களில் செவ்வாய்க்கிழமை மாலை முதல் மழை பெய்தது. வெப்பச்சலனம் காரணமாக சென்னையில் கடந்த சில நாள்களாக மழை பெய்தது. ஆனால் கடந்த இரு நாள்களாக சென்னையில் வறண்ட வானிலையே நிலவியது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை திடீரென சென்னையில் மழை பெய்தது. மாலை முதல் இரவு வரையில் பெய்த இந்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. மேலும் சாலைகள், சுரங்கப்பாதைகளில் தேங்கிய மழைநீரின் காரணமாக போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

**புதிய சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டம்: ஒபாமா அறிவிப்பு**



காற்று மாசு வெளியேற்றத்தைக் குறைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் தொலைநோக்குத் திட்டத்தை அமெரிக்க அதிபர் ஒபாமா திங்கள்கிழமை வெளியிட்டார்.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவின் நிலக்கரி மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் கரியமில வாயுவின் அளவை 32 சதவீதம் குறைக்க, அந்தத் திட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின்படி, அமெரிக்காவிலுள்ள அனைத்து மாகாணங்களும், தங்களது எரிசக்திப் பயன்பாடுகளுக்கு ஏற்ப மாசு வெளியேற்றக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைத் உருவாக்க வேண்டும்.

மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது, மாற்று எரிசக்தி உற்பத்தியில் ஈடுபடுவது, எரிசக்தியை திறம்படக் கையாள்வது ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ளும் மாகாணங்களுக்கு சலுகைகள் அளிக்கவும் இந்த சுற்றுச்சூழல் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒபாமா கூறியதாவது:

புதிய சுற்றுச்சூழல் திட்டத்தை செயல்படுத்துவது கடினமானது என்பது உண்மையே.

வருங்கால உலகும், நமது சந்ததியினரும் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய அச்சுறுத்தல் காற்று மாசுபாட்டால் ஏற்படும் பருவநிலை மாறுபாடுதான்.

அதற்கு எதிரான நடவடிக்கையை எடுக்க நாம் இப்போது தவறினால்,

எப்போதுமே அதைச் செய்ய முடியாமல் போய்விடும். வரும் டிசம்பர் மாதம் பாரிஸ் நகரில் நடைபெறவுள்ள உலக சுற்றுச்சூழல் மாநாட்டில் இந்தப் புதிய திட்டத்தின் மூலம் அமெரிக்கா உலகுக்கே முன்னுதாரணமாகத் திகழப்போகிறது என்றார் அவர். இந்தியா மீது நம்பிக்கை: முன்னதாக, அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜோஷ் எர்னஸ்ட் கூறியதாவது: பருவநிலை மாறுபாட்டைத் தடுக்கும் வகையில், மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், மாற்று எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகள் உறுதியளித்துள்ளன. பாரிஸில் நடைபெறவுள்ள சுற்றுச்சூழல் மாநாட்டில் நல்ல முடிவு கிடைக்கும் என்பதற்கு இது அறிகுறியாகும் என்றார் அவர். ஐ.நா. வரவேற்பு: ஒபாமா வெளியிட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தை ஐ.நா. பொதுச் செயலர் பான் கி-மூன் வரவேற்றுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ""பருவநிலை மாறுபாட்டுக்குத் தீர்வு காணவும், காற்று மாசைக் கட்டுப்படுத்தவும் தொலைநோக்கு தேவை என்பதற்கு இந்தத் திட்டம் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது" என்று பாராட்டு தெரிவித்தார்.

**முறையற்ற இறால் பண்ணைகள் மீது நடவடிக்கை: உயர் நீதிமன்றத்தில் அரசு உறுதி**

விழுப்புரம் மாவட்டத்தில் முறையற்ற வகையில் செயல்படும் இறால் பண்ணைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதியளித்தது. இது தொடர்பாக விழுப்புரத்தைச் சேர்ந்த வாசுகி மோகனசுந்தரம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விவரம்: நான் விழுப்புரம் மாவட்டம், நடுக்குப்பம் கிராம ஊராட்சித் தலைவராக உள்ளேன். நடுக்குப்பம் ஊராட்சியில் உள்ள வனப் பகுதியில் சுமார் 3,500 ஏக்கர் பரப்பளவில், முதலீட்டாளர்கள் சிலர் விரைவாக பணம் பெற வேண்டும் என்பதற்காக, இறால் வளர்ப்புப் பண்ணைகளை அமைத்துள்ளனர். இதனால், நீர், நிலம், காற்று ஆகிய மூன்றும் மாசுபடுகிறது. மேலும், இறால் வளர்ப்பால் கிராமத்தில் உள்ள அனைத்து நீர் நிலைகளும்

பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு முறை இறால் வளர்ப்புக்கு நிலத்தை பயன்படுத்திவிட்டால், அந்தப் பகுதி முழுவதும் மாசடைந்து, அங்கு வாழும் மக்களின் உடல் நலனுக்கும் கேடு விளைவிக்கிறது. எனவே, மக்களின் நலன் கருதி நடுக்குப்பம் கிராமப் பகுதியில் 3,500 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இறால் பண்ணைகளை மூட அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த மனு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.கே.கெப்ல், நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதலாவது அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. விசாரணைக்குப் பிறகு நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

விழுப்புரம் மாவட்ட வன அலுவலர் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில், வனப் பகுதியை ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்குத் திண்டிவனம் வனச் சரக அதிகாரி விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார் எனவும், ஆனால் இரண்டு பேர் மட்டுமே பதில் அளித்துள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் இருவரும் முறையான ஆவணங்களை வைத்திருக்கவில்லை. இது தவிர, அந்தப் பகுதியில் 100-க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் முறையற்ற வகையில் செயல்படுவதால், சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுவதையும் எதிர் மனுதாரர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், எதிர் மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் முறையற்ற இறால் பண்ணைகள் குறித்து போதிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்து, இது தொடர்பாக இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளனர். எனவே, இறால் பண்ணைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அக்டோபர் 30-ஆம் தேதிக்கு மூன்று நாள்களுக்கு முன்பாக நீதிமன்றத்தில் எதிர் மனுதாரர்கள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர்.

**தீவனப் பயிர் உற்பத்தி: மானியத்தில் விதைகள் வழங்கும் திட்டம்**

கால்நடை வளர்ப்போர் பயனடையும் வகையில் தீவிர தீவனப் பயிர் அபிவிருத்தி திட்டம் மூலம் விளைநிலங்களில் தீவன பயிர் செய்ய முழு மானியத்தில் விதைகள் வழங்கப்பட இருப்பதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஆட்சியர் வே.ராஜாராமன் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கால்நடைகளின் உற்பத்திக்கு தீவனம், பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாதாகும். பால் உற்பத்தியை பெருக்குவதற்கு கறவை மாடுகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது அவசியம். இதில், மொத்த செலவினத்தில் 65-70 சதவீதம் வரையில் தீவன உற்பத்திக்கு மட்டும் செலவிடப்படுகிறது.

ஆகவே இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, கால்நடை வளர்ப்போரை பசுந்தீவனம் உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்தும் வகையில் அரசு தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் நிகழாண்டில் தீவன சாகுபடி திட்டம் மூலம் விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. இறவையில் தீவனச்சோளம் மற்றும் வேலி மசால் ஆகிய தீவனப்பயிரை 500 ஏக்கரில் சாகுபடி செய்யவும், மானாவாரியில் தீவனச் சோளம் பயிர் செய்ய 2500 ஏக்கரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஏக்கரில் தீவனப் பயிர் செய்வதற்கு மானியத்தில் விதை வழங்கப்பட இருக்கிறது.

அதேபோல், ஆடுகளுக்கு இரையாகும் வகையில் மரவகை தீவனமான கொடுக்காபுளி, புளியமரம், பூவரசு, வாகை, கல்யாணமுருங்கை, வேம்பு போன்றவைகள் வைக்க விவசாயிகளுக்கு 20 ஆயிரம் மரக்கன்றுகள் வழங்கப்படவும் இருக்கிறது. மேலும், தீவனப்பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து பதப்படுத்தி ஊறுகாய் புல் ஆக கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை காலங்களில் வழங்க 250 கிலோ கொள்ளளவு கொண்ட 4 சைலேஜ் பைகள் வீதம் மற்றும் 400 அலகுகள் விலையில்லாமல் வழங்கப்பட இருக்கிறது. இதில், 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள் தேர்வு செய்யப்படுவர். மேற்காணும் திட்டங்களில் பயனடைய விரும்புவோர் மற்றும் கால்நடை

வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள உதவி கால்நடை மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளித்து பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**சர்க்கரை ஆலை மேலாண் இயக்குநர் பொறுப்பேற்பு**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கடந்த ஓராண்டாக தனிப்பொறுப்புடன் கூடிய மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்படாமல் காலியிடமாக இருந்தது.

பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் பிரகாஷ் கூடுதல் பொறுப்பாக இதனை நிர்வாகித்து வந்தார்.

இந்நிலையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றிய சங்கரநாராயணன் தற்போது பதவி உயர்வு பெற்று அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநராக செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார்.

**வாழைப் பயிருக்கும் காப்பீடு செய்யலாம்: ஆட்சியர்**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி மேற்கு பிர்க்காவில் முதன்முறையாக வாழைப் பயிருக்கும் பயிர் காப்பீடு திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாக, ஆட்சியர் க. நந்தகுமார் தெரிவித்துள்ளார். இது குறித்து, அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் வாழை 230 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கமுதி மேற்கு பிர்க்காவில் மட்டும் ஆண்டுதோறும் 100 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

**2015** ஆம் ஆண்டுக்கான காரீப் பருவத்தில்**,** கமுதி மேற்கு பிர்க்காவுக்கு மட்டும் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது**.**

**தேங்காய் நார் தொழிற்சாலைக்கு எதிரான போராட்டம் வாபஸ்**

பெருந்துறை அருகே செயல்படும் தேங்காய் நார் தொழிற்சாலைக்கு எதிரான போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. பெருந்துறை ஒன்றியம், முள்ளம்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட அலமேடு கிராமத்தில், தேங்காய் நார் கழிவுகளை மூலப் பொருளாகக் கொண்டு, தேங்காய் நார் கட்டி தயாரிக்கும் தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலை உள்ளது.

இந்த தொழிற்சாலையில் தேங்காய் நார் கழிவுகளை திறந்த வெளியில் கொட்டி வைத்துள்ளதாகவும், இவை காற்றில் பறந்து சமைத்த உணவு, குடிநீரில் விழுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் புதன்கிழமை (ஆகஸ்ட் 5) காலை அலமேடு கிராமத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று, பெருந்துறையில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தவுள்ளதாக பொதுமக்கள் அறிவித்திருந்தனர்.

இதுதொடர்பாக, செவ்வாய்க்கிழமை பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியர் பை.சிவசுப்பிரமணியம் தலைமையில் பேச்சுவார்த்தைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், 5 மாதத்துக்குள் கையிருப்பில் உள்ள மூலப் பொருள்களைக் கொண்டு, உற்பத்தி செய்து விட்டு பின்பு தொழிற்சாலையை மூடி விடுவதாக தொழிற்சாலை பங்குதாரர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்து புதன்கிழமை நடைபெறுவதாக இருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

இதில், பெருந்துறை காவல் ஆய்வாளர் ரமேஷ், மாசுக்கட்டுப்பாட்டு அலுவலக உதவிப் பொறியாளர் உதயகுமார், தேங்காய் நார் தொழிற்சாலை பங்குதாரர்கள், ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனத்தின் மண்டல அலுவலகம் வெளியிட்டுள்ளது. கமுதி மேற்கு பிர்க்காவில் உள்ள கீழராமநதி, மேலராமநதி, நீராவி, என்.கரிசல்குளம், முஷ்டக்குறிச்சி, வளநாடு மற்றும் மண்டலமாணிக்கம் ஆகிய வருவாய் கிராமங்களில் வாழைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களினாலும், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களினாலும் பயிருக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டினை ஈடுகட்ட முடியும்.கமுதி மேற்கு பிர்க்காவில் வாழை பயிரிட்டுள்ள மற்றும் பயிரிட உள்ள பயிர்க் கடன் பெற்ற மற்றும் பெறவுள்ள விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை, பிரீமியம் தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் வாழைக்கான காப்பீடு தொகை ரூ. 3,22,260. மொத்த பிரீமியத் தொகை ரூ. 24,140. சிறு, குறு மற்றும் இதர பெரிய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ. 12.085. அரசு வழங்கும் பிரீமியத்துக்கான 50 சதவிகித மானியத்துடன்

கூடிய தொகை ரூ. 12,085. வாழை பயிரிட்டுள்ள காலம் 1.4.2015 முதல் 30.9.2015 வரையாகும். பிரீமியம் செலுத்துவதற்கான கடைசி நாள் 30.9.2015.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் இதர வங்கிகளில் பயிர்க் கடன் மற்றும் வேளாண் நகைக் கடன் பெற்றவர்களிடம், உரிய வங்கியாளர்களால் கடன் வழங்கும் சமயம் பிரீமியம் பணம் பிடித்தம் செய்யப்பட வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள், மத்திய, மாநில அரசுகள் வழங்கும் 55 சதவிகித மானியத் தொகையான ரூ. 13,294 போக, மீதமுள்ள பிரீமியத் தொகை ரூ. 10,876 செலுத்த வேண்டும். இதர பெரிய விவசாயிகள் 50 சத பிரீமியத் தொகையான ரூ. 12,085 செலுத்த வேண்டும்.

வாழைக்கன்று நடவு செய்த ஒரு மாதத்துக்குள் பிரீமியம் செலுத்தி விட வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் பிரீமியம் செலுத்த செப்டம்பர் 15 ஆம் தேதி கடைசி நாளாகும். கடன் பெற்ற மற்றும் பெறாத விவசாயிகள், நெல் மற்றும் மிளகாய் பயிர்களுக்கு காப்பீட்டு பிரீமியம் செலுத்துவதைப் போல, வாழைப் பயிர் சாகுபடி உரிய அடங்கல் கிராம நிர்வாக அலுவலர்களிடம் பெற்று, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மற்றும் இதர வங்கிகளில் பிரீமியம் செலுத்த வேண்டும். எனவே, கமுதி மேற்கு பிர்க்காவில் உள்ள வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் உடனே காப்பீடு செய்து, உரிய பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதல்வருக்கு விவசாய சங்கங்கள் பாராட்டு**

விவசாயிகளின் நலன் கருதி தமிழக முதல்வர் எடுத்துள்ள முடிவுகளுக்கு தென்னிந்திய விவசாயிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். விவசாயிகள், தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கம் சார்பில், தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம், உதகையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம், தென்னிந்திய விவசாயிகள் கூட்டமைப்பு, தமிழ்நாடு நில உரிமை கூட்டமைப்பு ஆகிய அமைப்புகள் பங்கேற்றிருந்தன.

இக்கூட்டத்துக்கு, தென்னிந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜ் தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்கத்தின் திருப்பூர் மாவட்டச் செயலர் ஈஸ்வரன், கோவை மாவட்டச் செயலர் சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, எம்.எஸ்.செல்வராஜ் பேசியதாவது: மத்திய அரசு விவசாயிகளின் நலனை பாதிக்கும் வகையில் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு, மீள் குடியமர்வு மசோதாவை சட்டமாக்கக் கூடாது என நாடு முழுவதுமுள்ள விவசாயிகளும், பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் போராடி வருகின்றன. இந்நிலையில், விவசாயிகளின் பங்கு முக்கியமானது என்பதால் இந்த மசோதாவில் விவசாயிகளையும், மக்களையும் பாதிக்கும் அம்சங்களை தெளிவுபடுத்தி மக்களவை கூட்டுக்குழுவுக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டதைப்போல, தமிழக முதல்வருக்கும் அனுப்பப்பட்டது. இதையடுத்து, தமிழக முதல்வர் விவசாயிகளின் நலன்களையும், வேளாண்மை சேவைகளையும் பாதிக்கும் எந்த ஒரு அம்சத்தையும் தமிழக அரசு ஏற்காது என மத்திய அரசுக்கு தெளிவுபடுத்தியிருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு அமைப்பின் சார்பில் பாராட்டு தெரிவிப்பதாக குறிப்பிட்டார். இதில், விவசாயிகள் தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ராமகிருஷ்ணன், செயலர் தங்கச்சன், ஆலோசகர் ராதாகிருஷ்ணன், நிர்வாகிகள் ஆறுமுகம், ரோகினிதேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஆகஸ்ட் 21-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகஸ்ட் 21-ஆம் தேதி நடைபெறுகிறது. இதுதொடர்பாக, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தெரிவித்துள்ளதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகளின் குறைதீர்க்கும் கூட்டம் ஆகஸ்ட் 21-ஆம் தேதி உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் நடைபெறுகிறது. எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின், தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற முகவரிக்கு

நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**கலாம் நினைவாக மரக்கன்று நடும் விழா**

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை அரசு மேல்நிலைப் பள்ளியில், குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம் நினைவாக திங்கள்கிழமை 83 மரக்கன்றுகள் நடப்பட்டன. விழாவுக்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் எஸ்.அருணகிரி தலைமை வகித்தார். முதுகலை ஆசிரியர்கள் ஒய்.ஜெயராஜ் சாமுவேல், டி.எஸ்.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொறியாளர்கள் பா.அகஸ்டின், மு.சேதுராமன், ச.அருண்குமார் ஆகியோர் பல்வேறு வகையான மரக் கன்றுகளை வழங்கி நட்டனர். தொடர்ந்து, பசுமை இந்தியா-பசுமையான பள்ளி என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் நினைவாக பள்ளி வளாகத்தின் பல்வேறு பகுதிகளில் 83 மரக் கன்றுகள் நடப்பட்டன. விழாவில், தேசிய பசுமைப் படை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**முட்டை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு**

சீதோஷ்ண நிலை மாற்றத்தால் முட்டை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த மூன்று நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். தென்மேற்கு பருவமழை இரண்டாம் காலக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அதன் தாக்கம் வேகம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சிறு மழையைத் தவிர அதன் தாக்கம் இருக்க வாய்ப்பு இல்லை. அதிகபட்ச வெப்ப அளவு நீடிக்கும் கால அளவு குறைந்து காணப்படும். இதனால், கடந்த வாரங்களை போன்ற வெப்பத் தாக்குதல் கோழிகளில் இருக்காது. மேலும், தொடர்ந்து வெயிலின் தாக்கம் இருந்து வந்ததால், முட்டையின் உற்பத்தி அளவும், தீவன எடுப்பும் குறைந்து காணப்பட்டது. தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதன் காரணமாக, இந் நிலை படிப்படியாக நிவர்த்தியாகும்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.42, சென்னையில் ரூ.3.50. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.69, முட்டைக்கோழி கிலோ ரூ.67.

**மல்லிகைப்பூ விலை கடும் வீழ்ச்சி: ஒரு கிலோ ரூ.20-க்கு விற்பனை**

மல்லிகைப்பூ விலை செவ்வாய்க்கிழமை கடும் வீழ்ச்சியடைந்தது. ஒரு கிலோ ரூ. 20- க்கு ஸ்ரீரங்கம் பூ சந்தையில் விற்பனை செய்யப்பட்டது.

ஸ்ரீரங்கம் சாத்தார வீதியில் பெரிய பூ சந்தை உள்ளது. இந்த சந்தையில் பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் வருகின்றன. இங்கு வரும் மொத்த பூக்களை கடலூர், தஞ்சை, சேலம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

மல்லிகைப்பூ விலை ஆடிப்பெருக்கு நாளான திங்கள்கிழமை (ஆக. 3) ஒரு கிலோ ரூ. 180-க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை மல்லிகைப்பூ வரத்து பூ சந்தைக்கு அதிகமாக வந்தது. செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு கிலோ ரூ. 80-க்கு விற்ற மல்லிகைப்பூ நண்பகல் 12 மணியளவில் கிலோ ரூ. 20-க்கு விற்கத் தொடங்கியது. மல்லிகைப்பூவின் விலை கடும் வீழ்ச்சியடைந்ததால் பெண்கள் அதிகளவில் மல்லிகைப்பூக்களை வாங்கிச் சென்றனர்.

**இயந்திரம் மூலம் நடவு செய்வோருக்கு மானியம்**

இயந்திரம் மூலம் நாற்று நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக வேளாண்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி இயக்குனர் மு. சங்கரலெட்சுமி வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்திட அரசு மானியமாக 1 எக்டருக்கு ரூ. 3 ஆயிரம் வழங்கப்படும். இயந்திரம் மூலம்

நடவு செய்வதன் மூலம் திருந்திய நெல் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தவும், நெல் நடவு சமயத்தில் ஆள் பற்றாக்குறை பிரச்னையைத் தவிர்க்கவும் இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு நடப்பாண்டில் இந்த மானியம் வழங்கப்படும். எனவே இயந்திரம் மூலம் நடவு செய்ய ஆர்வம் உள்ள விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு பயனடையலாம்.

## ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளை பொருள்களை இருப்பு வைக்கலாம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகள் தங்களது விவசாய விளை பொருள்களைக் குறைந்த வாடகைக் கட்டணத்தில் இருப்பு வைக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் காய்கறி, பழங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் பெருமக்கள் தாங்கள் சாகுபடி செய்த வேளாண் விளை பொருட்களை இருப்பு வைத்து நல்ல விலைக்கு வரும் காலத்தில் விற்று பயனடைவதற்கு ஏதுவாக ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்துக் கொள்ள புதிதாக குளிர்பதன கிடங்கு செயல்படுகிறது.

எனவே, விவசாயிகள், வணிகர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## பெலாந்துறையில் 25 மி.மீ. மழை

கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. இதனால், குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது. ஆனால், பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது.

திங்கள்கிழமை இரவு கடலூர் பகுதியில் சாரல் மழை பெய்தது. அதே நேரத்தில் பெலாந்துறையில் 25 மில்லி மீட்டர் மழையும், மேல்மாத்தூரில் 10 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. மற்ற இடங்களில் மழை அளவு பதிவாகவில்லை.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கேரள அரசின் கெடுபிடியால் இயற்கை உரத்திற்கு கிராக்கி

தேனி: தமிழகத்தில் விளையும் காய்கறிகளில் நச்சுத் தன்மை அதிகம் என கூறி மாநிலத்திற்குள் அனுமதிப்பதில் கேரளஅரசு கெடுபிடி செய்து வருகிறது. அதிக நச்சு தன்மை இல்லை என ஆய்வு மூலம் தெரிவித்தாலும் அதை கேரளா ஏற்க மறுக்கிறது.நஞ்சில்லா காய்கறி சாகுபடி செய்ய இயற்கை உரங்களை பயன்படுத்துங்கள், அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன் உரம், பூச்சி மருந்து பயன்படுத்துவதை தவிருங்கள் என விவசாயிகளிடம் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் விழிப்புணர்வு கூட்டம் நடத்துகின்றனர்.அதன்படி தேனி மாவட்ட விவசாயிகள் தற்போது தோட்டம், வயல்களில் இயற்கை உரம் அதிகம் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். செயற்கை உரம், பூச்சி மருந்துகளை குறைத்து, பழைய முறைப்படி ஆடு, மாடு, கோழிகளின் கால்நடைகளின் கழிவு எருவுகளை வயல்களில் அதிகம் பயன்படுத்த துவங்கி உள்ளனர்.இதனால் தேனி மாவட்டத்தில் முத்துத்தேவன்பட்டி, கருவேல்நாயக்கன்பட்டி, போடி, ஆண்டிபட்டி பகுதிகளில் கால்நடை அதிகம் வளர்க்கும் கிராமங்களில் இயற்கை உரங்களை வாங்க வியாபாரிகளிடையே போட்டி நிலவுகிறது.இம் மாவட்டத்தில் மட்டும் தினமும் 30 லாரி இயற்கை உரம் விற்பனையாகிறது.

ராஜன், இயற்கை உர வியாபாரி, ராசிங்காபுரம் கூறியதாவது: 15 ஆண்டுகளாக இயற்கை உரம் வாங்கி விற்கிறேன். முன்பு இந்தளவிற்கு விவசாயிகளிடம் வரவேற்பு இல்லை. தற்போது மூன்று மடங்கு வியாபாரம் கூடியுள்ளது. பச்சை உரமாக இருந்தால் லாரிக்கு 6 டன், காய்ந்த உரமாக இருந்தால் 4 டன் எடை பிடிக்கும். லாரி வாடகையுடன் சேர்ந்து தூரத்திற்கு ஏற்ப ஒரு லாரி உரம் ரூ. 5 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை விலைபோகிறது.இதே உரத்தை மழைகாலத்தில் கேரளாவிற்கு கொண்டு சென்றால் ஒரு லாரி ஆட்டு எருவிற்கு ரூ.25 ஆயிரம், மாட்டு

எருவிற்கு ரூ.23 ஆயிரம் விலை கிடைக்கும். உரத் தேவை அதிகமாக உள்ளது. கிடைப்பது குறைவாக உள்ளது, என்றார்.

## 'ஆப் சீசனில்' மாம்பழம் வேண்டுமா அதுக்கும் வழி இருக்கு

காந்திகிராமம்: 'ஆப் சீசனில்' மாம்பழம் விளைவிக்கும் புதிய தொழில்நுட்பத்தை காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரிக்கு அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகளவில் மாம்பழம் விளைகிறது. 40 ஆயிரம் ஏக்கரில் மா மரங்கள் உள்ளன. மார்ச் முதல் ஜூலை வரை மாம்பழ சீசன் இருக்கும். மற்ற மாதங்களில் இருப்பு வைக்கப்பட்ட மாம்பழங்களே விற்பனைக்கு வரும். இந்த சமயங்களில் கேரளாவில் ஒரு கிலோ ரூ.100 வரை விற்கப்படும்.இதையடுத்து திண்டுக்கல் மாவட்டத்தில் 'ஆப் சீசனில்' மாம்பழங்களை விளைவிக்க காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் மாமரங்களை சுற்றி சிறு குழிகளை தோண்டி 'போகீளோ புயூட்ரசால்' என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை நீருடன் கலந்து ஊற்ற வேண்டும். பின் முறையாக நீர் பாய்ச்சி, பரிந்துரைக்கப்பட்ட உரங்களை பயன்படுத்த வேண்டும். இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்தலாம்.அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறியதாவது: முதற்கட்டமாக திண்டுக்கல் மாவட்டம் அஞ்சுகுழிப்பட்டியில் ஒரு ஏக்கரில் பயிர் வளர்ச்சி ஊக்கியை பயன்படுத்தி உள்ளோம். இவை பயன்படுத்திய 3 மாதங்களில் மா காய்க்க துவங்கும். இதனால் தேவைக்கு ஏற்ற காலக்கட்டத்தில் பயிர் வளர்ச்சி ஊக்கியை பயன்படுத்தி மாம்பழம் விளைவிக்கலாம். மகசூல் குறையாது, என்றார்.

## ஆடு,மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செப்.,15 முதல் திட்டம்

திண்டுக்கல்: தமிழகத்தில்ஆடு, மாடுகளுக்குஏற்படும்கோமாரி மற்றும் சப்பை நோயை தடுக்க செப்.15 முதல் தடுப்பூசி போடப்படும்.தமிழகத்தில்

கடந்த சில ஆண்டுகளாக மழையில்லை. இதனால் அணைகள், குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் வறண்டன. மேய்ச்சல் நிலங்களில் புல், பூண்டுகள்காய்ந்து, கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டது.இந்தாண்டு ஓரளவு மழை பெய்ததால் புல், பூண்டுகள் முளைத்து, தீவனப்பற்றாக்குறை ஒரளவு தீர்க்கப்பட்டுள்ளது.கோமாரி நோய் தாக்குதல்:தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கோமாரி நோய் தாக்குதலில் மாடுகள் தொடர்ந்து இறந்தன. இந்நோய் மாநிலத்தின் சில பகுதியில் மீண்டும் பரவுவது அதிகாரிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. தமிழகத்தில் கால்நடை ஆய்வாளர்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால் பரவும் நோயை கட்டுப்படுத்த முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: முதல்கட்டமாக ஏற்கனவே ஜனவரியில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. வரும் செப்.15முதல் மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்படும். இதனால் தொடர்ந்து மழைபெய்ததாலும் நோய்கள் பரவுவதற்கும், தாக்குவதற்கும் வாய்ப்பில்லை. கால்நடை ஆய்வாளர் பணியிடங்களை விரைந்து நிரப்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## கேரளாவுக்கு சென்றது 902 டன் காய்கறி

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு, எந்தப் பிரச்னையும் இன்றி, 902 டன் காய்கறிகள் சென்றதால், வியாபாரிகள், அரசு அதிகாரிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில், தேனி, கோவை, கன்னியாகுமரி, திண்டுக்கல், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்ட விவசாயிகளிடம் இருந்து, கேரளா செல்லும் காய்கறிகளில் ரசாயனதன்மை இருப்பதாக கூறி, அம்மாநிலத்தில் பிரச்னை கிளம்பியது.தேசிய ஆய்வகங்களில் சோதனை செய்யப்பட்டு, எடுத்து வரப்படும் காய்கறிகளை மட்டும், நேற்று முதல் அனுமதிக்க போவதாக, கேரள அதிகாரிகள் அறிவித்தனர். ஆனால், இந்த நடைமுறையில் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து, தமிழக சுகாதாரத் துறையின் சுகாதார ஆய்வாளர் மூலம், அடையாள சான்று வழங்கப்பட்ட

வாகனங்களில் வரும், காய்கறிகளை மட்டும் அனுமதிப்பதாக, கேரள அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்காக, தமிழகத்தைச் சேர்ந்த, 143 வியாபாரிகளுக்கு அடையாள சான்று வழங்கப்பட்டது.இந்த, அடையாள சான்றுடன், 902 டன் காய்கறிகள், நேற்று கேரளாவிற்கு எடுத்து செல்லப்பட்டன. அவற்றை, கேரளாவிற்குள், அம்மாநில அதிகாரிகள் அனுமதிக்க துவங்கி உள்ளனர்.-- நமது நிருபர்- -

## தமிழக காய்களுக்கு கேரளா கட்டுப்பாடு

கூடலூர்:தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு காய்கறி ஏற்றிச் செல்லும் வாகனங்கள் இனி, நச்சுத்தன்மை குறித்து உணவு பாதுகாப்பு துறையிடம் சான்று பெற வேண்டும்.தமிழகத்தில் இருந்து தினமும் 300க்கும் மேற்பட்ட லாரிகளில் குமுளி, கம்பம் மெட்டு, போடி மெட்டு வழியாக கேரளாவுக்கு காய்கறிகள் செல்கின்றன. இவற்றில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக நச்சுத்தன்மை இருப்பதாக கேரள அரசு புகார் எழுப்பி உள்ளது.இந்நிலையில், 'காய்கறி கொண்டு வரும் வாகனங்கள் உணவு பாதுகாப்பு துறையிடம் தரச்சான்று பெற்று வரவேண்டும். சான்று பெறாத வாகனங்கள் கேரளாவுக்குள் வர அனுமதியில்லை' என கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.கடந்த சில தினங்களாக, தமிழக காய்கறி வாகன உரிமையாளர்கள், உணவு பாதுகாப்புத்துறையிடம் இருந்து சான்று பெறுவதில் மும்முரமாக உள்ளனர். ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும் வகையில் உணவு பாதுகாப்புத் துறை சான்று வழங்கி வருகிறது. இன்று முதல் கேரள 'செக் போஸ்ட்'களில் காய்கறி வாகனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பப்படும்.'முதலில் சான்றில் உள்ள உரிம எண்ணை பதிவு செய்து, காய்கறிகளை மாதிரி எடுப்பர். மாதிரியை ஆய்வுக்கு உட்படுத்தி, நச்சுத் தன்மை அதிகமாக இருப்பது தெரிந்தால் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என கேரள தரப்பில் கூறப்பட்டுள்ளது.

## வெங்காயம் விற்க டில்லி அரசு முடிவு

புதுடில்லி : ஆகஸ்ட் 10ம் தேதி முதல் டில்லியில் 280 இடங்களில் அரசு சார்பில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.40க்கு விற்பனை செய்ய டில்லி அரசு முடிவு செய்துள்ளது. வட மாநிலங்களில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக வெங்காயத்தின் விலை அதிரடியாக உயர்ந்து வருகிறது. வெங்காயங்கள் பதுக்கப்பட்டு, அதிக விலைக்கு விற்கப்படுவததை தடுப்பதற்காக ரேஷன் கடைகளிலும், வேன்கள் மூலமும் வெங்காயம் விற்பனை செய்ய டில்லி உணவு விநியோகத்துறை தீர்மானித்துள்ளது.

## விவசாயிகள் வணிகரீதியாக முன்னேற வாய்ப்பு! நபார்டு வங்கி நடவடிக்கை

மதுரை : மதுரையில் விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்கப்படுகிறது. இச்சங்கத்தின் மூலம் விவசாயிகள் வணிக ரீதியாக முன்னேற நபார்டு வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

நபார்டு வங்கி மூலம் சுய உதவிக் குழுக்கள், உழவர் மன்றங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வழிநடத்தப்படுகின்றன. உழவர் மன்றங்களைப் பொறுத்தவரை அதிகபட்சம் 20 விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்படுவர். இவர்களால் அடுத்தகட்ட நிலைக்கு செல்ல முடிவதில்லை. இதை கருத்தில் கொண்டு ஒரே வகையான விவசாயம் செய்யும்

விவசாயிகள் 500 அல்லது ஆயிரம் பேரை ஒருங்கிணைந்து சங்கமாக செயல்பட நபார்டு வங்கி வழிகாட்டியுள்ளது. இதுகுறித்து வங்கியின் உதவிப் பொது மேலாளர் மகேஷ் கூறியதாவது: டில்லி சிறு விவசாயிகள் விவசாய வணிக கன்சோர்டியம் அமைப்பு மத்திய அரசின் ஏஜன்சியாக செயல்படுகிறது. 500 பேர் ஒருங்கிணைந்து சங்கம் ஆரம்பித்து தலா ரூ.1000 வீதம் சேமிப்பு செய்தால் ரூ.5 லட்சம் சேரும். அதேஅளவு தொகையை ஏஜன்சி சங்கத்திற்கு வழங்கும். இத்தொகையை முதலீடாக கொண்டு உரக்கடை ஆரம்பிக்கலாம். விவசாயிகளுக்கு குறைந்தவிலையில் உரங்கள் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்க வேண்டியதில்லை. ரு00 பேரும் சேர்ந்து ஒரே விற்பனையாக சந்தையில் கொண்டு செல்லலாம். மதுரையில் இச்சங்கங்களை ஒருங்கிணைக்க மூன்று தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதிலுள்ள பணியாளர்களுக்கான சம்பளம், இதர செலவு, விவசாய சுற்றுலாவுக்கான செலவுகளை நபார்டு வங்கி ஏற்கும். தற்போது மதுரையில் மல்லிகை, பூக்கள், காய்கறி, சிறுதானியம், தென்னை, பருத்தியை மையமாக கொண்டு கூ சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன என்றார்.

## ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ.1.65லட்சம் : அதிக வருவாய் தரும் நாட்டு வாழை



ரசாயன நச்சு உரங்கள் கலக்காமல் இயற்கை உரங்கள் கொண்டு வாழை சாகுபடி செய்கிறார் திருத்தங்கல் விவசாயி திருவேங்கட ராமானுஜம்.

அவர் கூறியதாவது: 3 ஏக்கர் பரப்பளவில் 1 ஏக்கருக்கு 1100 வீதம் 3,300 வாழை கன்றுகள் நட்டு பராமரித்து வருகிறேன். பாரம்பரிய வாழையான நாட்டு வாழைக்கு தமிழகத்தில் என்றுமே மவுசு உண்டு. ஜீரணதி, வைட்டமின்கள் நிறைந்த நாட்டு வாழையில் பல மருத்துவ குணங்கள் உள்ளன. இந்த வாழையின் நுணுக்கங்கள் அறிந்தால் பராமரிப்பது எளிது. இதன் இலைகள் தடித்து இருப்பதால் மார்க்கெட்டில் தனி "டிமான்ட்' இருக்கிறது. இலை ஒன்று ரூ. 2 முதல் 3 வரை விற்பனை ஆகிறது. வாழைத்தார் வரும் வரை கிட்டத்தட்ட இதிலே ஒரு வாழை மரத்திற்கு 100 ரூபாய் வரை பார்த்து விடலாம். வாழை தார் ஒன்று 150 முதல் 200 வரை விற்பனை ஆகின்றன. ஏக்கருக்கு குறைந்தது 1லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் ஈட்டமுடியும். பயிர் செலவினங்களும் குறைவு தான். தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை மூலமாக மானிய விலையில் விவசாயிகள் களை வெட்டும் இயந்திரங்கள் கிடைக்கிறது. இதில் ஊற்றப்படும் டீசல் ஒரு நாளைக்கு 5 லிட்டர் என பார்த்தால் ரூ. 200, இயந்திரத்தை இயக்க கூலி ரூ. 500 என களை வெட்ட ரூ. 700 தான் வருகிறது. இதனால் களை வெட்ட மாற்று ஆட்களை தேடவேண்டியதில்லை. நாட்டு வாழைக்கு இயற்கை சார்ந்த குப்பை, மாடு, ஆட்டு சாணி, எரிக்கிலை, பசுமை தாழ் உரங்கள் நேரம் அறிந்து போடப்பட்டு பயிரிடப்படுகிறது. வாழை மிகவும் கால் ஊன்றி மழை காலங்களில் சாயும் தன்மை குறைகிறது. இந்த ரக நாட்டு வாழைக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். மருந்து செலவுகள் குறைவு, செயற்கையாக ஏதும் சேர்ப்பது இல்லை. மண்புழு உரம், அசோஸ்பைரில்லம், பாஸ்டோ பாக்டீரியா திரவ வடிவில் குப்பையுடன் சேர்த்து போடும் போது, நோய் தன்மை குறைந்து வாழைக்கு ஊட்டச்சத்து கிடைக்கிறது என்றார். இவரிடம் பேச 98655 83986 ல் அழைக்கலாம்.**-எஸ்.சுகந்தன், சிவகாசி.**

"சொட்டு சொட்டாக நீர்; கட்டுக் கட்டாக கரும்பு"



சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலம் நீர் சொட்டு சொட்டாக வேருக்கு செல்வதால் களைகள் கட்டுப்பட்டு பயிர்கள் நன்றாக வளரும் என மதுரை வேளாண்மைக் கல்லூரி வேளாண் அறிவியல் மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ரங்கராஜ், உதவி பேரா சிரியர் ராஜமாணிக்கம் தெரிவித்தனர். பேராசிரியர் கூறியதாவது :

மதுரை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் குறைந்தளவு நீரில் பயிர் விளைவிப்பதற் காக செயல்படுத்தப்படும் திட்டம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம். தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் சந்தை சார்ந்த துல்லிய பண்ணைத்திட்டம் வேளாண்மை அறிவியல் மையம் மதுரையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். மதுரை மாவட்டத்திற்கு இத்திட்டத்தின் மூலம் கரும்பிற்கு மட்டும் 98 எக்டர் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு எக்டருக்கு தேவையான கரையும் உரங்கள் மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து கரும்பு சாகுபடி செய்து வரும் விவசாயிகள் இத்திட்டத்தில் பயனடைய தகுதியுடையவர்களாவர்.

துல்லிய பண்ணைத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் 40 சதவீதம் நீர் சிக்கனப்படுத்த முடியும். இரு மடங்கு விளைச்சல், தரமான விளைபொருள், களைக்கட்டுப்பாடு சாத்தியமாகிறது. மதுரை மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துள்ள கரும்பு விவசாயி கள்

கரையும் உரங்களை மானியமாகப் பெற்று பயனடைய 0452 - 242 2955 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

**- முனைவர் தி.ரங்கராஜ்,பேராசிரியர் மற்றும் தலைவர், மதுரை.**

**சின்ன சின்ன செய்திகள்**



**விதை உற்பத்திக்கு கடைபிடிக்க வேண்டிய பொதுவான மேலாண்மை உத்திகள்**: விதைப்பயிர் உற்பத்தியில் விதைப்பு முதல் அறுவடை வரை உயரிய தொழில்நுட்பங்களைக் கையாள்வதுடன், தகுந்த ஆய்வாளர்களின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். வளமான வடிகால் வசதியுடன் கூடிய நிலம், முந்தைய பருவத்தில் அதே ரகப்பயிரானது பயிரிடப்பட்டிருக்கக் கூடாது. விதைச்சான்று பெற்ற விதைகளை தேர்வு செய்ய வேண்டும். அதே இரகம் மற்றும் பிற இரகப்பயிர்களிடமிருந்து வயலின் நான்கு பக்கங்களிலும் குறிப்பிட்ட அளவு பயிர் விலகு தூரம் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட இரக செடிகளில் குணாதிசயங்களிலிருந்து மாறுபட்ட மற்றும் நோய் தாக்கிய செடிகளை நீக்க வேண்டும். சான்றளித்த துறையினரால் ஆய்வு செய்யப்பட வேண்டும். வினையியல் முதிர்ச்சி பெற்ற கதிர்களை அறுவடை செய்ய வேண்டும். விதை நிறம் மற்றும் விதை அளவு ஆகியவற்றின் அடிப்படையில் கதிர்களைத் தரம் பிரிக்க வேண்டும். விதை பகுப்பாய்வு செய்யப்பட்டு விதைத்தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**கேழ்வரகின் முக்கியத்துவம்:** இந்தியாவில் கர்நாடகம் கேழ்வரகு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. ஊட்டச்சத்து அடிப்படையில் அரிசி, கோதுமையை விட கேழ்வரகு மிகவும் சிறந்தது. சிறப்பான எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான சுண்ணாம்புச்சத்து அதிகம் இருப்பதால் வளரும் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் மிகச்சிறந்த உணவாகும்.

நார்ச்சத்து மிகவும் அதிகம் உள்ளது. கொழுப்புச்சத்து மிகவும் குறைவு. எனவே உடல் பருமனைக் குறைக்க கேழ்வரகை எப்போதும் உணவில் பயன்படுத்தலாம். சர்க்கரை நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். கேழ்வரகு ஒரு நல்ல அமினோ அமிலங்களின் கலவையாகும். தீமை பயக்கும் கொலஸ்டிராலின் அளவை குறைக்க உதவுகிறது. இரத்த சோகை உள்ளவர்கள் கேழ்வரகை தொடர்ந்து உணவில் பயன்படுத்தி வந்தால் இரும்புச்சத்து குறைபாடு நீங்கும். ஒருவருக்கு இளமை அழகை பராமரிக்கவும், தோல் முதுமை அடைவதைத் தவிர்க்கவும் கேழ்வரகு மிகவும் உதவுகிறது. அனைவரின் தேவைக்கும், ருசிக்கும் ஏற்றவாறு கேழ்வரகிலிருந்து ராகிமால்ட், கேழ்வரகு சூப், கேழ்வரகு இட்லி, கேழ்வரகு உப்புமா, தோசை, இடியாப்பம், கேழ்வரகு கனி, நூடுல்ஸ் சேமியா, கேழ்வரகு பணியாரம், கேழ்வரகு அல்வா போன்ற சத்தான உணவு வகைகளை தயாரித்து பயன் பெறலாம்.

**வேளாண் பம்ப்செட்டுக்கு 80% மானியம் :** காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்ட நதிப்பள்ளத்தாக்கு திட்டத்தின் தலைமை பொறியாளர் தமிழ்ச்செல்வன் புதிய மானிய திட்டத்தைப் பற்றி தெரிவித்தார். அதாவது சூரியஒளி மூலம் இயங்கக் கூடிய மோட்டார் பம்ப் செட் மற்றும் சூரியஒளி கூடார உலர்த்தி என இரண்டு மானியத் திட்டங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நிலையான சோலார் அமைப்பு சூரியனின் நகர்வுக்கு ஏற்றவாறு திரும்பிக் கொள்ளும் சோலார் அமைப்பு என இரண்டு வகைகள் இருக்கின்றன. நிலையான சோலார் அமைப்புக்கு சுமார் 4 லட்சம் செலவாகும். சூரியனின் நகர்வுக்கு ஏற்றவாறு திருப்பிக் கொள்ளும் சோலார் அமைப்புக்கு சுமார் 5 லட்சம் செலவாகும். இந்த இரண்டு அமைப்புகளுக்கும் 80% மானியம் உண்டு. சூரியஒளி கூடார உலர்த்தியும் மானிய முறையில் வழங்கப்படுகிறது. சூரிய வெப்பத்தை பயன்படுத்தி விளை பொருட்களில் உள்ள ஈரப்பதத்தை நீக்கி, நீண்ட நாட்களுக்கு பாதுகாப்பாக வைக்க முடியும். இதை அமைக்க மொத்தம் 4 லட்சம் ரூபாய் செலவாகும். இது 80% மானியத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் மூலம் பயன்பெற அருகில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**குதிரைவாலி மாங்காய் சாதம்**: தயாரிக்க தேவையான பொருட்கள் - குதிரைவாலி அரிசி- 1 கப், மாங்காய் துருவல் - 1/4 கப், காய்ந்த மிளகாய் -2, கறிவேப்பிலை-1 ஆர்க்கு, உப்பு - தேவைக்கேற்ப, எண்ணெய்- 1/4 தேக்கரண்டி, கடலைப்பருப்பு-1 தேக்கரண்டி, கடுகு- 1/4 தேக்கரண்டி, உளுந்து-1/4 தேக்கரண்டி, இஞ்சி துறுவல்-1/4 தேக்கரண்டி. **செய்முறை:** குதிரைவாலி அரிசி 1 கப்புக்கு 2 1/2 கப் தண்ணீர் சேர்த்து வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். வாணலியல் சூடாக்கி எண்ணெய் ஊற்றி, கடுகு, உளுந்து, கடலைப்பருப்பு, காய்ந்த மிளகாய், இஞ்சித்துருவல், கறிவேப்பிலை சேர்த்து தாளிக்கவும். இதனுடன் உப்பு, மாங்காய் துறுவல் சேர்த்து கிளறவும். பிறகு வடித்த சாதத்தைச் சேர்த்து கிளறிக் கொள்ளவும். நன்கு கிளறி எடுத்து பரிமாறவும். தகவல்: திருமதி.கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், S3, B Block, Ponni Apartments 10/4, Ganapathy 1st Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai-600 041.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.1 கோடிக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம்**




அந்தியூர்,

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ரூ.1 கோடிக்கு ஏலம் போனது.

<u>தேங்காய்</u>

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 25 ஆயிரம் தேங்காயை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர். இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று 10 ரூபாய் 50 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு ஏலம் போனது.

கொப்பரை தேங்காய் 70 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 10–க்கும் அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 207–க்கும் ஏலம் விடப்பட்டது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

எள்

எள் 250 மூட்டைகள் கொண்டு வந்து இருந்தனர். இதில் கருப்பு ரக எள் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 249–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 669–க்கு ஏலம் விடப்பட்டது. மொத்தம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்துக்கு எள் விற்பனை செய்யப்பட்டது.

மக்காச்சோளம் 40 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.1,469–க்கும் அதிகபட்ச விலையாக ரூ.1,531–க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.50 ஆயிரத்துக்கு மக்காச்சோளம் விற்பனையானது. ரூ.1 கோடிக்கு...

நிலக்கடலை மொத்தம் 250 மூட்டைகள் கொண்டு வரப்பட்டது. இதில் நிலக்கடலை (பச்சை) குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.2 ஆயிரத்து 315–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 209–க்கும் ஏலம் போனது. நிலக்கடலை (காய்ந்தது) குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 521–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 11–க்கும் ஏலம் எடுக்கப்பட்டது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு நிலக்கடலை விற்பனை செய்யப்பட்டது.

பருத்தி மொத்தம் 6 ஆயிரம் மூட்டைகள் கொண்டுவந்து இருந்தனர். பி.டி காட்டன் ரக பருத்தி குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 150–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 400–க்கும் என மொத்தம் ரூ.1 கோடிக்கு விற்பனையானது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.1 கோடியே 10 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. ஏலத்துக்கு மேட்டுப்பாளையம், திருப்பூர், கோவை, தர்மபுரி, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்து சென்றனர்.

**ஈரோட்டில் பலத்த மழை வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது**



ஈரோடு,

ஈரோட்டில் நேற்று பெய்த பலத்த மழையால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. <u>பலத்த மழை</u>

ஈரோடு மாவட்டத்தில் கோடை காலத்தை போல வெயில் வாட்டி வருகிறது. கடந்த 3 நாட்களுக்கு முன்பு லேசான மழை பெய்தது. அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் மாவட்டத்தில் பல இடங்களில் ஆங்காங்கே மழை பெய்தது. இந்தநிலையில் நேற்று மாலை சுமார் 4.30 மணி அளவில் ஈரோட்டில் தூறலுடன் மழைபெய்யத் தொடங்கியது. சிறிது நேரத்தில் மழை அருவியாக கொட்டியது. இந்த பலத்த மழையால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஈரோடு பஸ்நிலையம், நாச்சியப்பா வீதி, சத்தி ரோடு, அகில்மேடு வீதி, வாசுகி வீதி, மேட்டூர் ரோடு, பிரப் ரோடு, ஈஸ்வரன்கோவில் வீதி, தெப்பக்குளம் வீதி, காந்திஜி ரோடு, மணிக்கூண்டு என்று அனைத்து பகுதிகளிலும் வெள்ளம் பெருகியது. <u>சாக்கடை வெள்ளம்</u>

சாக்கடை கால்வாய்களில் காட்டாறுபோல வந்த வெள்ளம் பெருக்கெடுத்து ரோடுகளில் ஓடியது. இதனால் சாலைகளில் செல்ல முடியாத படி சாக்கடை வெள்ளம் நிரம்பியது. கொங்கலம்மன்கோவில் வீதி, நேதாஜி ரோடு பகுதியில் மழை வெள்ளம் சாக்கடையாக ஓடியது.

ஈரோடு பட்டேல் வீதியில் 25 ஆண்டுகளாக உள்ள வாகை மரம் ஒன்று வேருடன் சாய்ந்து விழுந்தது. இதுபோல் பெருந்துறை ரோடு காந்தி நகர்

பகுதியில் ஒரு புங்கன் மரமும் வேரோடு பெயர்ந்து விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் இல்லை. இதில் அங்கு நிறுத்தப்பட்டு இருந்த ஒரு மோட்டார் சைக்கிள் சேதம் அடைந்தது. மாலை 6 மணி வரை மழை தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது. மின்தடை

ஈரோடு சென்னிமலை ரோடு அரசு போக்குவரத்து கழக பணிமனை அருகில் உள்ள மின்கம்பம் ஒன்று நேற்று மாலை சாய்ந்தது. இதனால் மின்ஒயர் அறுந்து விழுந்ததால் அந்த பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் மின்வாரிய ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அறுந்து விழுந்த மின்ஒயர்களை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதேபோல் ஈரோடு, முள்ளாம்பரப்பு, கஸ்பாபேட்டை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை பெய்த மழையால் மின்சார வினியோகம் தடைப்பட்டது.

**31 ஆயிரத்து 15 எக்டேரில் குறுவை நெல் சாகுபடி கலெக்டர் சுப்பையன் தகவல்**



தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 31 ஆயிரத்து 15 எக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள்

குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி பேசியதாவது:- தஞ்சை மாவட்டத்தில் 2015-16-ம் ஆண்டில் குறுவை பருவத்தில் 43 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 31 ஆயிரத்து 15 எக்டேரில் ஆழ்குழாய் கிணறு மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 20 ஆயிரத்து 804 எக்டேரில் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த பருவத்தில் ஆடுதுறை-36, ஆடுதுறை-43 மற்றும் ஆடுதுறை-45 ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் குறுவை பருவத்திற்கான நாற்றங்கால் 15 எக்டேரில் உள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் ஆடுதுறை-36, ஆடுதுறை-43 மற்றும் ஆடுதுறை-45 ஆகிய விதைநெல் ரகங்கள் இதுவரை 394 மெட்ரிக் டன் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 5 மெட்ரிக் டன் விதைநெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் 6 மெட்ரிக் டன் விதைநெல் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் சம்பா பருவத்தில் நீண்டகால நெல் ரகமான சாவித்திரி, மத்தியகால ரகமான சுவர்ணாசப், ஆடுதுறை-46 ஆகிய விதைநெல் ரகங்கள் விரிவாக்க மையங்களில் 170 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பயறு வகை பயிர்கள் 5 ஆயிரத்து 505 எக்டேரிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 950 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் உர தேவைக்காக யூரியா 7 ஆயிரத்து 825 டன்னும், டி.ஏ.பி. உரம் 3 ஆயிரத்து 450 டன்னும், பொட்டாஷ் உரம் 3 ஆயிரத்து 383 டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 3 ஆயிரத்து 100 டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு அவர் பேசினார்.

**கேரளாவுக்கு காய்கறிகளை கொண்டு செல்ல வியாபாரிகள் பதிவு சான்று பெற காலக்கெடு முடிந்தது திருப்பி அனுப்பும் நிலை ஏற்படுமா?**




தேனி,

கேரளாவுக்கு காய்கறிகள் கொண்டு செல்வதற்கு பதிவு சான்றிதழ் பெறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிந்தது. இதனால் காய்கறிகளை திருப்பி அனுப்பும் நிலை உருவாகி உள்ளது.

<u>கேரளாவுக்கு காய்கறிகள்</u>

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பழங்களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு அதிகம் இருப்பதாக கேரள அரசு புகார் தெரிவித்து உள்ளது. தமிழகத்தில் இருந்து காய்கறிகள் கொண்டு செல்லும் வியாபாரிகள் உரிமம் பெற்று இருக்க வேண்டும் என்று கேரள அரசு அறிவித்தது. மேலும் இந்த உரிமம் பெறுவதற்கு நேற்று வரை காலக்கெடுவை கேரள அரசு விதித்து இருந்தது. இந்த காலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிந்தது. தேனி மாவட்டத்தில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான டன் காய்கறிகள் கேரள மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. அவை மாவட்டத்தில் போடிமெட்டு, கம்பம்மெட்டு, குமுளி மலைச்சாலை வழியாக கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. மாவட்டத்தில் இருந்து மொத்தம் 150 வியாபாரிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.

அவர்களில் 50 பேர் பதிவு சான்றிதழ் பெறுவதற்கு உணவு பாதுகாப்புத்துறையில் விண்ணப்பித்தனர். அதில் 40 பேருக்கு பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டது. காலக்கெடு நீட்டிக்கப்படவில்லை

மீதமுள்ள வியாபாரிகள் பதிவு சான்றிதழ் பெற முன்வராமல் உள்ளனர். காரணம் இன்னும் சில தினங்களில் கேரளாவில் ஓணம் பண்டிகை கொண்டாட இருப்பதால், காய்கறிகள் தேவையை பூர்த்தி செய்ய பதிவு சான்றிதழ் பெற காலக்கெடுவை நீட்டிக்க வாய்ப்பு உள்ளது என்று வியாபாரிகள் மத்தியில் பரவலான கருத்து நிலவியது. மேலும் பதிவு சான்றிதழ் பெற்றால் முறையாக வரி செலுத்தவேண்டும் என்று வியாபாரிகள் எண்ணினர். இந்த நிலையில் பதிவு சான்றிதழ் பெறுவதற்கான காலக்கெடுவை நீட்டித்து அறிவிப்பை இதுவரை கேரள மாநில அரசு வெளியிடவில்லை. இதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணி முதல் தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு செல்லும் காய்கறிகளுக்கு பதிவு சான்றிதழ் பெற்று இருக்கவேண்டும் என்று நிலை உருவாகி உள்ளது.

வியாபாரிகள் எதிர்பார்ப்பு இதனால் தேனி மாவட்டத்தில் இருந்து பதிவு சான்றிதழ் பெறாமல் இருக்கும் வியாபாரிகள் ஏற்றிச் செல்லும் காய்கறி வாகனங்களை கேரள மாநில எல்லையில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பும் நிலை உருவாகி உள்ளது. மறுபுறம் ஓணம் பண்டிகையையொட்டி காய்கறிகள் தேவை இருப்பதால் திருப்பி அனுப்ப மாட்டார்கள் என்று வியாபாரிகள் தரப்பில் எதிர்பார்ப்பு உள்ளது.

இருந்தாலும் பதிவு சான்றிதழ் பெறாத வியாபாரிகளின் காய்கறிகளை கேரள மாநிலத்தில் இருந்து திருப்பி அனுப்புவதை தவிர்க்க, தேனி மாவட்டத்தில் உள்ள தமிழக வாகன சோதனைச்சாவடிகளில் சான்றிதழ் பெற்று இருப்பதை தணிக்கை செய்ய முடிவு செய்து இருப்பதாக போலீஸ் வட்டாரத்தில் கூறப்படுகிறது

**நுழைவு வரி அதிகம் வசூல் செய்ததை கண்டித்து விவசாயிகள் முற்றுகை அதிகாரிகள் பேச்சு வார்த்தை**



நல்லம்பள்ளி வாரச்சந்தையில் நுழைவு வரி அதிகம் வசூல் செய்ததை கண்டித்து விவசாயிகள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தினர்.

வாரச்சந்தை

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் செவ்வாய்க்கிழமை தோறும் வாரச்சந்தை கூடுவது வழக்கம். இங்கு தர்மபுரி, தொப்பூர், நல்லம்பள்ளி மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், வியாபாரிகள் தங்களது விளைநிலங்களில் விளையும் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வருவார்கள். மேலும் ஆடுகள், மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதை வாங்குவதற்காக சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டகளில் இருந்து வியாபாரிகள் வருகிறார்கள். இந்த வாரச்சந்தையை முனுசாமி என்பவர் குத்தகை எடுத்து வரி வசூல் செய்து வருகிறார். இந்தநிலையில் நேற்று அதிகாலை முதலே சந்தைக்கு ஆடுகள், மாடுகள் மற்றும் காய்கறி உள்ளிட்ட பொருட்களுக்கு விவசாயிகள், வியாபாரிகள் கொண்டு வந்தனர். அப்போது குத்தகைதாரர் முனுசாமி சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வந்த பொருட்களுக்கு கூடுதலாக கட்டணம் வசூல் செய்ததாக தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த சமூக அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள், விவசாயிகள்,

வியாபாரிகள் கூடுதல் கட்டணம் வசூல் செய்ததை கண்டித்து திடீரென சந்தையில் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். பேச்சு வார்த்தை இதுகுறித்து தகவல் அறிந்ததும் நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அதிகாரி புகழேந்தி தலைமையில் அதிகாரிகள் மற்றும் அதியமான்கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது இவர்கள் கூறுகையில், குத்தகைதாரர் முனுசாமி அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக வசூலித்து வருகிறார். மேலும் வெளி மாவட்டங்களில் இருந்து சந்தைக்கு வரும் வாகனங்களுக்கும் கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதைதடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர். அதற்கு வட்டார வளர்ச்சி அதிகாரி புகழேந்தி மற்றும் போலீசார் வாரச்சந்தையில் அரசு நிர்ணயித்த கட்டணம் வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதுதொடர்பாக குத்தகைதாரரிடம் விபரம் கேட்கப்படும் என்று தெரிவித்தனர். அதைதொடர்ந்து விவசாயிகள், வியாபாரிகள் முற்றுகை போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இந்த திடீர் முற்றுகை காரணமாக வாரச்சந்தையில் பரபரப்பு ஏற்பட்டது.

**மீண்டும் விற்பனைக்கு வருகிறது மேகி நூடுல்ஸ்? பாதுகாப்பானது என சோதனையில் முடிவு**




கோவா, மேகி நூடுல்ஸ் உணவுப் பொருட்களில் அளவுக்கு அதிகமாக காரீயமும், ரசாயன உப்பான மோனோ சோடியம் குளுட்டாமேட்டும் சேர்க்கப்பட்டு இருப்பதாக புகார்கள் எழுந்தன.இதைத் தொடர்ந்து மேகி

நூடுல்ஸ் உணவுப் பொருட்கள் மீது பல்வேறு மாநிலங்கள் ஆய்வக சோதனை மேற்கொண்டன. அப்போது அவற்றில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் ரசாயன பொருட்கள் அதிகம் சேர்க்கப்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டது.இதனால், நெஸ்லே இந்தியா நிறுவனத்தின் 9 வித மேகி நூடுல்சுகளையும் பாதுகாப்பற்றவை மற்றும் மனிதர்களுக்கு தீங்குவிளைவிப்பவை என்று கூறி மத்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் நாடு முழுவதும் தடை செய்தது. இந்த நிலையில், மேகி நூடுல்ஸ் பாதுகாப்பான உணவு தான் என உணவு பாதுகாப்பு தர நிர்ண ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. கோவா உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) 5 மாதிரி நூடுல்ஸ்களை ஆய்வுக்காக மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்துக்கு (CFTRAI) அனுப்பியது.

இந்த ஆய்வின் முடிவில் உணவு பாதுகாப்பு விதிகள் 2011 ன் விதிகள் அனுமதிக்கப்பட்ட அளவுடன் மேகி நூடுல்ஸ் ஒத்துபோவது கண்டறியப்பட்டது. மேகி நூடுல்ஸ் பாதுகாப்பானது தான் என தெரியவந்துள்ளதையடுத்து நெஸ்லே நிறுவனத்திற்கு நிம்மதி ஏற்பட்டுள்ளது இதனால், மேகி நூடுல்ஸ் சந்தையில் மீண்டும் விற்பனைக்கு விரைவில் வரலாம் என தெரிகிறது.

**நறுமண பொருள் உற்பத்திக்கு மானியம் வழங்க திட்டம்**



புதுடெல்லி: நறுமண பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க மானியம் வழங்குவதற்கு இந்திய நறுமண பொருட்கள் வாரியம் திட்டமிட்டுள்ளது. அதாவது, நறுமண பொருட்கள் சாகுபடி, மண் வளம், பாசன, வடிகால் வசதி, நவீன தொழில்நுட்ப முறைகள் போன்றவற்றை பயன்படுத்த விவசாயிகளுக்கு குறிப்பிட்ட அளவு மானியமாக அளிக்க இந்த வாரியம் முடிவு செய்துள்ளது. நறுமண பொருட்கள் வாரியத்தின் 12வது திட்ட த்தின்படி, ஏலக்காய் உள்ளிட்ட நறுமண பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், நாடு முழுவதும் உற்பத்தி அதிகரிக்க இத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும், மானிய பலன் விவசாயின் நில பரப்பு உள்ளிட்டவற்றுக்கேற்ற மாறுபடும் நறுமண பொருட்கள் வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய திட்டத்தின்படி ஒரு ஹெக்டேருக்கு தமிழகம், கேரளாவில் ரூ.70,000 வரையும், கர்நாடகாவில் ரூ.50,000 வரையும் வழங்கப்படும் என தெரிகிறது. இந்த மூன்று மாநிலங்களிலும் குறிப்பாக ஏலக்காய் பயிரிடுவதை ஊக்குவிக்க இந்த திட்டம் கொண்டுவரப்படுவது குறிப்பிடத்தக்கது.

**மேட்டூரில் நீர்திறப்பு குறைப்பு**




மேட்டூர்: காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆடி பெருக்கு பண்டிகைக்காக கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில் வரும் 9ம் தேதி முதல் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் பண்டிகை கொண்டாட்டம் முடிந்ததையடுத்து நேற்று முதல் திறப்பு மீண்டும் 2 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 96.30 அடியாக இருந்தது. நேற்று காலை 96.27 அடியாக சரிந்தது. நீர்வரத்து நேற்று காலை 3,318 கனஅடியாக இருந்தது.சாத்தான்குளம் பகுதியில் முருங்கை குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் முப்பெரும் விழாவில் ஜி.கே.வாசன் பேச்சு

சாத்தான்குளம், : சாத்தான்குளம் பகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் முருங்கை குளிர் பதன கிடங்கு அமைக்க அரசு முன் வரவேண்டும் என முப்பெரும் விழாவில் ஜி.கே. வாசன் பேசினார். சாத்தான்குளம் புதிய பஸ் நிலையம் அருகில் வட்டார தமாகா சார்பில் கொடியேற்றுவிழா, ஸ்ரீவைகுண்டம் தொகுதி நிர்வாகிகள் சந்திக்கும் விழா மற்றும் காமராஜர் பிறந்த தினவிழா ஆகிய முப்பெரும் விழா நடந்தது.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத் தலைவர் எஸ்.டி.ஆர். விஜயசீலன் தலைமை வகித்தார். சாத்தான்குளம் கிழக்கு வட்டாரத் தலைவர் வக்கீல் சேவியர் சுதாகர், மேற்கு வட்டாரத் தலைவர் முரசொலிமாறன், நகரத்

தலைவர் விஜய் முன்னிலை வகித்தனர். தமாகா தலைவர் வாசன் பேசியதாவது: சாத்தான்குளம் பகுதியில் பல பிரச்னைகள் நிறைவு பெறாமல் இன்னும் கிடப்பில் உள்ளது. அத்திட்டங்களை மக்களோடு நின்று தமாகா போராடும். சாத்தான்குளம், உடன்குடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் உள்ள சடையனேரி கால்வாயை விரிவாக்கம் செய்ய வேண்டும். நம்பியாறு, கருமேனி, தாமிரபரணி ஆகிய நதிநீர் இணைப்புத் திட்டத்தில் இரு பிரிவு பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளது.

தற்போது ரூ.890 கோடியில் திட்ட மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பணிகள் மந்தமாக உள்ளது. இப்பணி நிறைவடையாததால் சாத்தான்குளம், ராதாபுரம், நாங்குநேரி, உடன்குடி பகுதி மக்களின் விவசாயம், குடிநீர் பாதிக்கப்பட்டுள்ளது. சாத்தான்குளம், உடன்குடி பகுதியில் விவசாயிகள் முருங்கை பயிரிட்டு அதை வெளியிடங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். எனவே, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இப்பகுதியில் முருங்கை குளிர்பதன கிடங்கு அமைக்க அரசு முன் வர வேண்டும். பெரியதாழையில் ஏற்படும் கடல் அரிப்பை தடுக்கும் வண்ணம் தூண்டில் வளைவு அமைக்க நிதி ஒதுக்கியும் திட்டம் செயல்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து மழை காலத்தில் தண்ணீர் வீணாக கடலுக்கு செல்கிறது. இதை வறட்சி பகுதிகளுக்கு திருப்பி விட வேண்டும். இந்த பணிகள் முழுமையாக நிறைவேற மக்களோடு நின்று தமாகா போராடும்.இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட மகளிரணி தலைவி தங்கத்தாய் பிரபாகரன் வரவேற்றார். முன்னதாக ஜி.கே. வாசன், காமராஜர் சிலைக்கு மாலையணிவித்தார். புதிய பஸ் நிலையம் முன்பு கட்சி கொடியேற்றினார். மாநிலத்துணைத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் மத்திய அமைச்சர் பாலசுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி தலைவர் முத்து, தூத்துக்குடி வடக்கு மாவட்டத் தலைவர் கதிர்வேல், முன்னாள் எம்பி ராமசுப்பு, மாநில சிறுபான்மை பிரிவு செயலாளர் அமீர்கான், கொள்கை பரப்பு

செயலாளர் உமாபாரதி பேசினர். வட்டார துணைத் தலைவர் ஐயப்பன் நன்றி கூறினார்.

**பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் அளவை குறைக்கவேண்டும் முதல்வருக்கு கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கோரிக்கை**

உத்தமபாளையம் : பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை குறைக்கவேண்டும் என கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க கூட்டம், தலைவர் தர்வேஷ்மைதீன் தலைமையில் உத்தமபாளையத்தில் நடந்தது. செயலாளர் சகுபர்அலி, துணைத்தலைவர்கள் கம்பம் ஓ.ஆர்.நாராயணன், தேனி பொன்னுப்பிள்ளை, சின்னமனூர் ராஜா முன்னிலை வகித்தனர். உத்தமபாளையம் விவசாயிகள் சங்க தலைவர் அபுதாகீர் வரவேற்றார். முன்னதாக முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் மறைவிற்கு மவுனஅஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில், "கம்பம் பள்ளத்தாக்கு விவசாயம் மட்டுமல்லாமல் தென் மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தற்போது விவசாயத்திற்காக ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி, உப்பார்பட்டி, பழனிசெட்டிபட்டி உள்ளிட்ட இடங்களில் முதல்போக நெல்நடவு தற்போதுதான் முடிவடைந்துள்ளது. இன்னும் 3 மாதங்களுக்கு மேல் தண்ணீர் தேவைப்படும். எனவே, அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை 500 முதல் 600 கன அடியாக குறைக்க வேண்டும். இல்லாவிடில் 3 மாதங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். இது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு விவசாயிகள் சங்கம் சார்பில் பேக்ஸ் அனுப்பப்பட்டுள்ளது" என்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரியாறு அணைப்பகுதியில் தற்போது மழை இல்

லை. அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரி ன் அளவை குறைக்காவிட் டால் நீர்மட்டம் குறைந்து, 3 மாதத்திற்குள் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும். இதனால், விவசாயம் பாதிக்கப்படும்” என்று விவசாயிகள் கூறினர்.

**விவசாயி தற்கொலை**

தேவதானப்பட்டி : தேவதானப்பட்டி அருகே அட்டனம்பட்டியைச் சே ர்ந்தவர் விவசாயி வைரம் (40). இவருக்கு மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர். வயிற்று வலியால் வைரம் அவதிப்பட்டுள்ளார். இதற்காக பல இடங்களில் சிகிச்சை மேற்கொண்டும் குணமாகவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில், வயிற்று வலி அதிகமானாதால் நேற்று முன்தினம் பூச்சி மருந்தை குடித்து வீட்டில் மயங்கிக் கிடந்தார். அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். தேவதானப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

**உயர் ரத்த அழுத்தத்தை போக்கும் குங்குமப்பூ**




உயர் ரத்த அழுத்தத்தை போக்க கூடியதும், மாரடைப்பை தடுக்கவல்லதும், மாதவிடாய் பிரச்னையை தீர்க்க கூடியதுமான குங்குமப்பூவின் மகத்துவத்தை பற்றி நாம் இன்று பார்ப்போம். வடமொழியில் ‘குங்குமா’ என்று அழைக்கப்படுவது குங்குமம். காஷ்மீரில்

விளையக்கூடியது என்பதால் 'காஷ்மிரா' என்ற பெயரும் குங்குமத்துக்கு உள்ளது. வாசனை பொருளாக அறியப்படும் குங்குமப்பூ, அரு மருந்தாக பயன்படுகிறது.

ரத்த அழுத்தத்தை குறைக்க கூடிய தன்மை கொண்டது குங்குமப்பூ. ரத்தத்தை சீராக்க கூடியது, ரத்த நாள வீக்கத்தை சரிசெய்ய கூடியது குங்குமப்பூ. மாரடைப்பை மட்டுமின்றி புற்றுநோயை தடுக்க கூடியது. உறுப்புகளை சீராக செயல்பட வைக்கிறது. குங்குமப்பூ திரி போன்று இருக்கும். அதிலிருந்து 15, 20 திரியை எடுத்து கொள்ள வேண்டும். 1 ஏலக்காயை தட்டி வைத்துக்கொள்ளவும். சீரகம் அரை ஸ்பூன், மிளகு அரை கிராம் எடுத்துகொள்ளவும். இவைகளுடன் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும்.

சுவைக்காக பனங்கற்கண்டு, தேன் சேர்த்துக் கொள்ளலாம். இதை குடித்துவர உயர் ரத்த அழுத்தம் குறையும். பொதுவாக உணவில் மணத்துக்காகவும், வண்ணத்துக்காகவும் சேர்க்கப்படும் குங்குமப்பூவில் ஏராளமான நன்மைகள் உள்ளன. உள் உறுப்புகளை தூண்டக்கூடியது. நரம்பு தளர்ச்சி, ஒற்றை தலைவலியை தீர்க்கவல்லது. சோர்வாக இருப்பவர்களுக்கு புத்துணர்வை கொடுக்க கூடியது. மாதவிலக்கை தூண்டக் கூடியது. மாதவிலக்கை சீராக்கும் குங்குமப்பூ உடல் வலியை போக்க கூடியது. குங்குமப்பூவுடன் அரை ஸ்பூன் பெருங்காயம், பனை வெல்லம் 1 ஸ்பூன் சேர்த்து கொதிக்க வைத்து குடிக்க வேண்டும். இது தடைபட்ட மாதவிடாய்க்கு நல்லது. சீரண உறுப்புகளை சீராக்கும் தன்மை கொண்ட குங்குமப்பூ மலச்சிக்கலை போக்கவல்லது.பல்வேறு நன்மைகளை கொண்ட குங்குமப்பூவின் விலை அதிகம். 200 கிராம் குங்குமப்பூவின் விலை 800 ரூபாய். பிள்ளைப்பேறு காலத்தில் பாலில் குங்குமப்பூ கலந்து குடித்தால் குழந்தை சிவப்பாக பிறக்கும் என்பது உண்மையல்ல. ஏராளமான நன்மைகள் இருந்தாலும் குங்குமப்பூவை அளவுடன்தான் பயன்படுத்த வேண்டும்.

**ஆரோக்கியப் பெட்டகம்: சவ்சவ்**




'சமைக்க வேண்டாம்... அப்படியே சாப்பிடலாம்' என்கிற வகையறா காய்கறிகளில் 'சவ்சவ்' என்கிற பெங்களூரு கத்தரிக்காயும் ஒன்று. ஆனால், அந்தத் தகவல் பலரும் அறியாதது. சமையலறை மெனுவில் கூட்டு இடம் பெறுகிற நாட்களில், அதிலும் வேறு எந்தக் காயும் சிறப்பாக அமையாத பட்சத்தில்தான் சவ்சவ்வின் பக்கம் பலரது பார்வையும் திரும்பும். அன்றாடம் சேர்த்துக் கொள்ளக்கூடிய அவசியமான காய்களில் சவ்சவ்வும் ஒன்று! டயட் செய்கிறவர்களுக்கு சவ்சவ் மிக அருமையான ஒரு காய். தினசரி சவ்சவ்வை உணவில் சேர்த்துக் கொள்கிறவர்களுக்கு சீக்கிரமே உடல் கொழுப்பு குறைந்து, சரியான வடிவத்துக்குத் திரும்பும்...'' என்கிறார் டயட்டீஷியன் நித்யஸ்ரீ. சவ்சவ்வின் மகத்துவம் மற்றும் மருத்துவத் தகவல்களுடன், சூப்பரான 3 ஆரோக்கிய ரெசிபிகளையும் செய்து காட்டியிருக்கிறார் அவர். லேசான இனிப்புச் சுவையுடன் கூடிய சவ்சவ், கலோரி குறைந்த ஒரு காய். நார்ச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள், ஆன்டி ஆக்சிடன்ட் என எல்லாம் நிறைந்தமுழுமையான காயும்கூட. ஒரு கப் வேக வைத்த சவ்சவ்வில் இருப்பது வெறும் 38 கலோரிகள் மட்டுமே. சவ்சவ்வில் மருந்துக்குக்கூட கொலஸ்ட்ராலோ, சாச்சுரேட்டட் கொழுப்போ கிடையாது. இதில் உள்ள நார்ச்சத்தானது எடையைக் குறைக்க உதவுவதுடன், ரத்தத்தில் சர்க்கரையின்

அளவையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. இதில் அதிக அளவு

வைட்டமின் சி, ஃபோலேட், தயாமின், ரிபோஃப்ளோவின் உள்ளன. இதிலுள்ள சோடியம் மற்றும் பொட்டாசியம், ரத்த அழுத்த அளவைக் கட்டுப்பாட்டில் வைக்க உதவுகிறது. எடைக் குறைப்புக்காக உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்கிறவர்கள் எந்தஉணவுடனும் சவ்சவ்வை சேர்த்துக் கொள்ளலாம். இதிலுள்ள நார்ச்சத்தானது கொஞ்சம் சாப்பிட்டதுமே வயிறு நிரம்பிய உணர்வைக் கொடுப்பதுடன், உணவு இடைவேளைகளுக்கு இடையில் எதையாவது கொறிக்கிற உணர்வையும் தடுக்கும்.மலச்சிக்கல் பிரச்னைக்கு சவ்சவ் மிகச் சிறந்த மருந்து. தொடர்ந்து இதை உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு குடல் தொடர்பான கோளாறுகளும் குணமாகும். தவிர, இது உடலிலுள்ள கெட்ட கொழுப்பை நீக்கி, நல்ல கொழுப்பை அதிகரிக்கவும் உதவுகிறது. ரத்த அழுத்தப் பிரச்னையால் அவதிப்படுவோருக்கு அதைக் கட்டுக்குள் கொண்டு வரும் சவ்சவ். இதிலுள்ள அதிக பொட்டாசியமானது, சோடியம் சமநிலைமையின்மையை சரிப்படுத்தி, அதன் விளைவாக உயர் ரத்த அழுத்தம் வராமல் காக்கும். ரத்தத்தில் Homocysteine என்கிற அமினோ அமிலம் அதிகமானால் இதய நோய்களும் பக்கவாதமும் வரும் அபாயம் அதிகரிக்கும். சவ்சவ்வில் உள்ள வைட்டமின் பி9, இந்த அமினோ அமிலத்தை சேரவிடாமல் தடுக்கிறது.சவ்சவ்வில் உள்ள வைட்டமின் பி9 சத்தானது கர்ப்பிணிகளுக்கு மிகவும் அவசியமானது. கர்ப்ப காலத்தில் இந்தச் சத்து குறையும். அப்படிக் குறைவதால் பிறக்கும் குழந்தை கை வளர்ச்சிக் குறைபாடு, இதயக் கோளாறு உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு உள்ளாகலாம். கர்ப்பிணிகள் சவ்சவ்வை முறையாக உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் வைட்டமின் பி9 சத்துக் குறைபாடு ஏற்படாமல் காத்துக் கொள்ளலாம்.ரத்தசோகைக்குக் காரணமான இரும்புச்சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் பி2 குறைபாடு இரண்டையும் ஈடுகட்டி, ரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன் மூலம் ஹீமோகுளோபின் அளவையும் கூட்டும் சக்தி கொண்டது சவ்சவ்.

**எப்படித் தேர்வு செய்வது?**

அளவில் சின்னதாக, உறுதியாக, பச்சை ஆப்பிளின் நிறத்தில் இருக்க வேண்டும். பெரிய காய்கள் முற்றியிருக்கலாம். அதில் சுவை இருக்காது. இளசான காய் என்றால் அதன் தோலைக்கூட நீக்கத் தேவையில்லை. சவ்சவ்வின் தோலிலும் ஏராளமான சத்துகள் இருக்கின்றன. பேப்பர் பையில் சுற்றி, 2 வாரங்கள் வரை ஃப்ரிட்ஜில் வைத்து உபயோகிக்கலாம்.

**என்னவெல்லாம் சமைக்கலாம்?**

வேக வைக்கலாம். பேக் செய்யலாம். பச்சையாக வெட்டிப் போட்டு காய்கறி மற்றும் பழ சாலட்டுடன் சேர்த்து சாப்பிடலாம். சவ்சவ்வில் சூப், குழம்பு, சாம்பார், கூட்டு, பொரியல், பஜ்ஜி, பச்சடி, துவையல், ஸ்டஃப்டு புரோட்டா என எது வேண்டுமானாலும் சமைக்கலாம். இயல்பிலேயே லேசான கசப்புச் சுவையுடைய சவ்சவ், சமைத்ததும் லேசான இனிப்புச் சுவைக்கு மாறும்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் சவ்சவ்வில்)**

| | |
|---|---|
| ஆற்றல் | 19 கிலோ கலோரிகள் |
| கார்போஹைட்ரேட் | 4.51 கிராம் |
| சர்க்கரை | 1.66 கிராம் |
| நார்ச்சத்து | 1.7 கிராம் |
| புரதம் | 0.82 கிராம் |
| வைட்டமின் சி | 7.7மி.கி. |
| வைட்டமின் கே | 4.1 மி.கி. |

**சவ்சவ் கேசரி**

**என்னென்ன தேவை?**

சவ்சவ் - 100 கிராம், பாசிப் பருப்பு - 100 கிராம், நெய் - 100 மி.லி., முந்திரி - 25 கிராம், ஏலக்காய் - 2, பால் - 200 மி.லி., பாதாம் - 25 கிராம்.

**எப்படிச் செய்வது?**

சவ்சவ்வை தோல் நீக்கி சதுரமான துண்டுகளாக வெட்டி, தண்ணீரில் வேக வைத்து மசித்து வைக்கவும். பாசிப் பருப்பை கடாயில் வறுத்து பொடி செய்து கொள்ளவும். பாலை முக்கால் பாகமாக சுண்டும் வரை காய்ச்சவும். அதில் வறுத்துப் பொடி செய்த பாசிப் பருப்பு பொடியை

சேர்த்து நெய் சேர்த்து நன்கு கிளறவும். பிறகு சவ்சவ் மசியலை சேர்த்து கெட்டியாகும் வரை கிளறவும். நன்கு கெட்டியானதும் வறுத்த முந்திரி, பாதாம் சேர்த்து ஏலக்காயை பொடித்து தூவி இறக்கவும். சூடாகப் பரிமாறவும்.

**சவ்சவ் பாயசம்**

**என்னென்ன தேவை?**

சவ்சவ் - 100 கிராம், பால் - 200 மி.லி., சர்க்கரை - 100 கிராம், முந்திரி - 5-10, திராட்சை - 10, நெய் - 100 மி.லி., கன்டென்ஸ்டு மில்க் - 50 மி.லி, ஏலக்காய் தூள் - 1 சிட்டிகை.

**எப்படிச் செய்வது?**

சவ்சவ்வை சுத்தம் செய்து தோல் நீக்கி துண்டுத் துண்டுகளாக வெட்டி, வேக வைத்துக் கொள்ளவும். பிறகு கடாயில் நெய் ஊற்றி முந்திரி, திராட்சையை வறுத்து எடுத்து வைக்கவும். பாலை சுண்டக் காய்ச்சி அதில் வேக வைத்த சவ்சவ்வை மசித்து சேர்க்கவும். நன்கு கொதித்தவுடன் சர்க்கரை, வறுத்த முந்திரி, திராட்சை சேர்த்து கன்டென்ஸ்டு மில்க், ஏலக்காய் தூள் சேர்த்து இறக்கவும்.சுவையான சவ்சவ் பாயசம் தயார்.

**சவ்சவ் கட்லெட்**

**என்னென்ன தேவை?**

சவ்சவ் - 100 கிராம், கேழ்வரகு மாவு - 100 கிராம், வெங்காயம் - 50 கிராம், பச்சை மிளகாய் - 2-3, எண்ணெய் - தேவையான அளவு, சீரகம் - 1 டீஸ்பூன், சோம்பு - 1 டீஸ்பூன், சோள மாவு - 1 டீஸ்பூன், பிரெட் தூள் - 50 கிராம், கறிவேப்பிலை - சிறிது.

**எப்படிச் செய்வது?**

சவ்சவ்வை தனியாக வேக வைத்து மசித்து எடுத்து வைத்துக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் சேர்த்து சூடானதும் சீரகம், சோம்பு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து நன்கு வதக்கவும். பின் நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வதக்கவும். பிறகு அத்துடன் சவ் சவ், கேழ்வரகு மாவு, சோள மாவு சேர்த்துக் கிளறி கட்லெட் போன்று தட்டி தவாவில் போட்டு பொரித்தெடுக்கவும். தேவைக்கேற்ப வட்டம்,

சதுர வடிவில் மாவை தயாரித்து பிரெட் தூளில் புரட்டி எடுத்து பொரித்தால் சூடான கட்லெட் தயார்.

**ஆரோக்கியப் பெட்டகம்: புடலங்காய்**




பத்தியச் சாப்பாடு முதல் பந்தி விருந்து வரை எல்லாவற்றிலும் இடம்பெறக்கூடிய முக்கியமான காய் புடலை. வெள்ளரிக்காய் வம்சத்தைச் சேர்ந்த இது, வருடந்தோறும் விளையக்கூடியது. பாம்பு போல நீண்டு வளர்கிற வகை, வெள்ளைக் கோடுகள் கொண்ட ஹைப்ரிட் வகை, குட்டை வகை, வெள்ளைப் புடலை, ஹைப்ரிட் தாய் புடலை எனப் பல வகையான புடலை நமக்குக் கிடைக்கின்றன. பொரியலாக, கூட்டாக, சாலட்டாக இன்னும் எப்படி வேண்டுமானாலும், எதனுடன் வேண்டுமானாலும் சமைக்கக்கூடிய காய் இது. சீக்கிரம் வெந்துவிடக் கூடியது. ஒரு பிடி அதிகம் சாப்பிட்டாலும் தன் வேலையைக் காட்டாதது...'' - புடலங்காயின் புகழுரைகளுடன் ஆரம்பிக்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி பஜாஜ். புடலங்காயின் மருத்துவக் குணங்களுடன், அவற்றை வைத்துச் செய்யக்கூடிய மூன்று சுவையான ரெசிபிகளையும் பகிர்கிறார் அவர்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் அளவில்)**

ஆற்றல் 86.2 கிலோ கலோரி

கொழுப்பு 3.9 கிராம்

சோடியம் 33 மி.கி.

| | | | |
|---|---|---|---|
| பொட்டாசியம் | | 359.1 | மி.கி. |
| நார்ச்சத்து | | 0.6 | கிராம் |
| புரதம் | | 2 | கிராம் |
| வைட்டமின் | ஏ | 9.8 | % |
| வைட்டமின் | பி6 | 11.3 | % |
| வைட்டமின் | சி | | 30.6% |
| கால்சியம் | | 5.1 | % |
| இரும்புச்சத்து | | | 5.7% |

**மருத்துவ குணங்கள்**

இயற்கையான ஆன்ட்டிபயாடிக் தன்மை கொண்டது புடலங்காய். இருமலைப் போக்கக்கூடியது. இது மிகச்சிறந்த மல மிளக்கியும் கூட. உடலிலுள்ள கபத்தையும் சீழையும் வெளியேற்றி, நச்சுகளையும் வெளித்தள்ளக்கூடியது.

நீரிழிவுக்காரர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிற வெகுசில காய்களில் புடலங்காய்க்கு முக்கிய இடமுண்டு. நவீன சீன மருத்துவத்தில் புடலங்காய் செடியின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு முக்கியமான மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது. நீரிழிவுக்காரர்களுக்கு மற்ற காய்களுக்கெல்லாம் இவ்வளவுதான் அளவு என வரையறுக்கப்படுவது போல, புடலங்காய்க்கு கட்டுப்பாடு ஏதுமில்லை. டைப் 2 நீரிழிவு உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்தது. எடை அதிகரிக்காமலும் தேவையான ஊட்டச் சத்துகள் கிடைக்கும் படியும் பார்த்துக் கொள்வது கூடுதல் சிறப்பு.

- புடலைச் செடியின் இலைகளில் இருந்து பெறப்படும் சாறு இதயக் கோளாறுகளுக்கு நல்லது என்கிறது மருத்துவம். மூச்சிரைப்பு மற்றும் உடற்பயிற்சிக்குப் பிறகு ஏற்படுகிற நெஞ்சு வலிகளுக்கு புடலை சாற்றை தினம் 3 வேளைகளுக்கு 1 முதல் 2 டேபிள்ஸ்பூன் கொடுத்தால் நிவாரணம் தெரியும்.
- புடலை இலைச் சாற்றுடன் தனியா சேர்த்து கொதிக்க வைத்த டிகாக்ஷன் கலந்து தினம் 3 வேளைகள் குடித்து வந்தால் மஞ்சள் காமாலை கட்டுக்குள் வருமாம்.

- காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதிலும் புடலைச் சாற்றுக்கு பெரும் பங்கு உண்டு. காய்ச்சல் கண்டவர்களுக்கு புடலங்காயைக் கொதிக்க வைத்த டிகாக்ஷனை கொடுத்தால் ஒரே இரவில் காய்ச்சல் தணிந்து, உடல்நலம் இயற்கையாக சீராகத் தொடங்கும்.
- மலச்சிக்கல் மற்றும் செரிமானக் கோளாறு களால் அவதிப்படுவோருக்கும் புடலை மருந்தாகப் பயன்படுகிறது. புடலையின் வேர்ப்பகுதியானது மலமிளக்கியாகவும் புடலை இலையானது குடல் தொடர்பான பிரச்னைகளை சரி செய்யவும் பயன்படுகிறது. மிகவும் தீவிரமான மலச்சிக்கலால் அவதிப்படுவோருக்கு புடலங்காயின் விதைகள் உதவும் என்கிறார்கள் மருத்துவர்கள்.
- புடலங்காய் தண்ணீர் சத்து மிகுந்த ஒரு காய். கொஞ்சம் சாப்பிட்டதுமே வயிறு நிறைந்த உணர்வைத் தரும். எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க நினைப்போர், புடலங்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- அதிக நீர்ச்சத்துள்ள காரணத்தினால், உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது இது. வெயில் நாட்களில் புடலங்காயை உண்பதன் மூலம் வெம்மையின் பாதிப்புகளில் இருந்து தப்பிக்கலாம்.
- கால்சியம், மக்னீசியம், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களை அதிகமாகக் கொண்டது புடலை. எலும்புகளின் ஆரோக்கியத்துக்கும் உடலின் நிலையை சரிவிகிதத்தில் வைத்திருக்கவும் உதவும்.
- கூந்தல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் புடலங்காய்க்கு முக்கிய இடமுள்ளது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆலோபேஷியா எனப்படுகிற புழுவெட்டால் பாதிக்கப்பட்டு, முடியை இழப்போருக்கு புடலங்காய் இழந்த முடியை மீட்டுத் தரும். இதிலுள்ள அதிகப்படியான தாதுச்சத்துகள், வைட்டமின்கள் மற்றும் கரோட்டீன்கள் முடி மற்றும் சரும ஆரோக்கியத்தைக் காக்கக்கூடியவை. பொடுகைப் போக்கும் குணமும் இதற்கு உண்டு.
- வைட்டமின் சி சத்து நிறைந்திருப்பதால் புடலங்காய் நோய் எதிர்ப்பு சக்திக்கும் காரணமாகிறது.

**எப்படி வாங்குவது?**

காய்கள் உறுதியாகவும், முனைகள் வட்டமாகவும் இருக்க வேண்டும். இதன் நிறமானது மிதமான பச்சை முதல் அடர் பச்சை வரை இருக்கலாம். மஞ்சள் அல்லது வெள்ளை நிறத்தில் இருந்தாலோ, ஊதிய மாதிரி உப்பியிருந்தாலோ, நுனிகள் சுருங்கியிருந்தாலோ வாங்க வேண்டாம். மெல்லிய புடலங்காய்களில், கனத்த காய்களைவிட விதைகள் குறைவாக இருக்கும்.

**எப்படிப் பத்திரப்படுத்துவது?**

நீர்ச்சத்துள்ள காய்களை கூடியவரையில் உடனுக்குடன் உபயோகிப்பதே சிறந்தது. என்னதான் ஃப்ரிட்ஜில் பத்திரப்படுத்தினாலும், அதன் நீர்ச்சத்து வற்றி, காய் வதங்கி, பிற சத்துகளையும் இழக்கும். ஒன்றிரண்டு நாட்கள் வரை ஃப்ரிட்ஜில் வைத்து உபயோகிக்கலாம்.

**கவனம்!**

புடலங்காயின் விதைகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை என்றாலும் அவற்றை அளவுக்கு மீறி எடுத்துக் கொண்டால் வயிற்றுப் போக்கு, வயிற்றுப் பொருமல், வாந்தி மற்றும் வயிற்று வலி உண்டாகலாம். புடலங்காயின் வேர்ப்பகுதிகளும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் அளவோடு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கருவைப் பாதிக்கக் கூடும் என்பதால் கர்ப்பிணிப் பெண்கள், புடலை வேரைத் தவிர்ப்பது பாதுகாப்பானது.

ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி பஜாஜ் தந்த சமையல் குறிப்புகளை சுவை மாறாமல் சமைத்துக் காட்டியிருக்கிறார் சமையல் கலைஞர் ஹேமலதா.

**புடலங்காய் கூட்டு**

**என்னென்ன தேவை?**

சின்னதாக நறுக்கிய புடலங்காய் - 1 கப், துவரம் பருப்பு அல்லது கடலைப் பருப்பு - அரை கப், இஞ்சி-பூண்டு விழுது - 1 டீஸ்பூன், பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை, சீரகம் - 1 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் - 2, பச்சை மிளகாய் - 2, கடுகு - அரை டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிது, தேங்காய்த் துருவல் - 3 முதல் 4 டேபிள்ஸ்பூன், மஞ்சள் தூள் - கால் டீஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது?**

தேங்காய், மஞ்சள் தூள், சீரகம், பச்சை மிளகாய் சேர்த்துக் கொரகொரப்பாக அரைக்கவும். பருப்பை தனியே பிரஷர் குக்கரில் வேக வைத்துக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு, கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் சேர்த்து தாளிக்கவும். இஞ்சி-பூண்டு விழுது, பெருங்காயத் தூள் சேர்க்கவும். புடலங்காய் துண்டுகளைச் சேர்த்து வதக்கவும். காய் முக்கால் பாகம் வெந்ததும் பருப்பையும் உப்பையும் சேர்த்து இன்னும் சிறிது வேக விடவும். அரைத்த விழுது சேர்த்து ஒரு கொதி வந்ததும் இறக்கி, கறிவேப்பிலை தூவிப் பரிமாறவும்.

**புடலங்காய் விதை துவையல்**

**என்னென்ன தேவை?**

புடலங்காய் - 1, எண்ணெய் - 1 டீஸ்பூன், தேங்காய்த் துருவல் - அரை கப், கடுகு - 1 டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - 3 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் - 2, உப்பு- தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது?**

புடலங்காயை சுத்தம் செய்து, விதைகள் நீக்கித் தனியே எடுத்து வைக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்துப் பொன்னிறத்துக்கு வறுத்து ஆறவிடவும். மறுபடி கடாயில் சிறிது எண்ணெய் விட்டு சூடாக்கி, புடலங்காய் விதைகளைச் சேர்த்து பச்சை வாசனை போக வதக்கவும். வறுத்து ஆற வைத்துள்ள மற்ற பொருட்களுடன் சேர்த்து தேங்காய் துருவலும் உப்பும் வைத்துக் கரகரப்பாக அரைக்கவும். டிபன் மற்றும் சாதம் என எல்லாவற்றுக்கும் பொருத்தமான சைட் டிஷ் இது.

**புடலங்காய் பொரியல்**

**என்னென்ன தேவை?**

புடலங்காய் - கால் கிலோ, எண்ணெய் - இரண்டரை டீஸ்பூன், மஞ்சள் தூள்- 1 சிட்டிகை, உப்பு- தேவைக்கேற்ப.

தாளிப்பதற்கு...

கடுகு - 1 டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, கறிவேப்பிலை- சிறிது.

**எப்படிச்செய்வது?**

புடலங்காயைக் கழுவி, நீளவாக்கில் வெட்டவும். விதைகளையும், உள்ளே உள்ள வெள்ளைநிறப் பகுதியையும் நீக்கி, மெலிதான துண்டுகளாக வெட்டவும்.கடாயை சூடாக்கி, எண்ணெய் விட்டு, கடுகை வெடிக்கச் செய்யவும். உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய், பெருங்காயம், கறிவேப்பிலை சேர்க்கவும். பருப்பு சிவந்ததும், புடலங்காய் சேர்க்கவும். மஞ்சள் தூள் சேர்த்துக் கிளறி மூடி வைக்கவும். லேசாக வெந்ததும் உப்பு சேர்க்கவும். தண்ணீர் தெளித்து, மூடி வைத்து வேக விடவும். தண்ணீர் அதிகமானால் காய் குழைந்து சுவையே மாறிப் போகும். அவ்வப்போது திறந்து கிளறி விடவும். தேவைப்பட்டால் இன்னும் ஒரு டீஸ்பூன் எண்ணெய் சேர்க்கலாம். வெந்ததும் இறக்கி, சாம்பார் சாதம், ரசம் சாதத்துடன் பரிமாறவும்.